

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், கூமாங்குளம்,
தனிநாயகம் வீதியை வதிவிடமாகவும் கொண்ட



அமரர்

# திரு.கதிரவேலு பரராஜசிங்கம்

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த 31ம் நாள்

# நினைவு மலர்

**01.03.2021**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், கூமாங்குளம், தனிநாயகம் வீதியை வதிவிடமாகவும் கொண்ட*

# அமரர்
# திரு.கதிரவேலு பரராஜசிங்கம்
## அவர்களின்
## 31 ஆம் நாள் நினைவுமலர்
# 01.03.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

புவிதனில் எம்மை புன்னகை சிந்தவைத்து
உணவுகொடுத்து கல்வி கொடுத்து புகழ் கொடுத்து
செல்வம் கொடுத்து அரவணைத்த அன்புத்
தெய்வம் தலைவனாய் தந்தையாய் முன்னறி
தெய்வமாக இன்னமுதூட்டி பொன்மொழி பேசி
புகழுடனும் தென்புடனும் வாழ திருநிறைவளித்த
பேராத்மா எம் தந்தைக்கு
இம்மலர் சமர்ப்பணம்

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

இங்ஙனம்,
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவுடன்...



மண்ணில்
30.07.1960

விண்ணில்
30.01.2021

அமரர்

# திரு.கதிரவேலு பரராஜசிங்கம்

அவர்களின்

## திதி நிர்ணய வெண்பா

சார்வரிதனில் மலர்ந்த தை திங்கள் அபரபக்க
சீர்மிகு துதியை நிதியதுவே இவ்வுலகில்
பராராஜசிங்கம் என்றழைக்கும்
சீரான் சிவனழ அடைந்த நாள்

30.01.2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்

## திருச்சிற்றம்பலம்

## விநாயகர் வணக்கம்

கரும்பும் இளநீரும் காரெள்ளும் தேனும்
விரும்பும் அவல் பலவும் மேன்மேல் - அருந்திக்
குணமுடைய னாய்வந்து குற்றங்கள் தீர்க்குங்
கணபதியே இக்கதைக்கு காப்பு

## தேவாரம்

நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நகரத்தில் இடர்பட்டோம் நடலை இல்லோம்
ஏமாப்போம் பிணி அறியோம் பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லை
தாமார்க்கும் குடியல் லாத்தான் துன்பமில்லை
சங்கரன் நற்சங்கவெண் குழையோர் காதில்
கோமாற்கே நாம் டின்னும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர் சேவடியினையே குறுகினோமே

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கி பொழுதினைச்சுருக்கும்
புழுத்தலைப் புலையனே உனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே



www.pararajasingam.com
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண்ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் மற்புதக்கூத்தா
அம்பொன்செய் அம்பலத்தரசே
ஏறணி கொடியெம் மீசனே உன்னைத்
தொண்டனே னிசையுமா றிசையே.

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப்பொருள்
சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையும் சில
தேவற் சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரள்
மேரு விடங்கள் விடைப்பாகன்
பல்லாண்டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்
பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன்
அடியின் கீழ் இருக்க என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

பாதிமதி நதி போது மணிசடை
நாதர் அருளிய குமரேசா
பாகு கனிமொழி மாது குறமகள்
பாதம் வருடிய மணவாளா
காது மொருவிழி காக முற அருள்
மாயன் அரிதிரு மருகோனே
காலன் எனை அணுகாமல் உனதிரு
காலில் வழிபட அருள்வாயே
ஆதி அயனொடு தேவர்சுரகுலகு
ஆளும் வகையுறு சிறைமீளா
ஆர மயிலினில் ஏறி அமரர்கள்
சூழ அரவரும் இளையோனே
சூத மிகவளம் சோலை மருவு
சுவாமி மலைதனில் உறைவோனே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

**திருச்சிற்றம்பலம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திரு.கதிரவேலு பரராஜசிங்கம் அவர்களின் வாழ்க்கைச் சுவட்டில் ஒருபகுதி

ஆய கலைகள் நர்த்தனமாடும்
ஆழிசூல் தீவுதன்னில்.
தூய தனிநாயக முதலியார்
வழித் தோன்றல் பரம்பரையில்..
மேவுசீர் உயர்திரு கதிரவேல் தம்பதிகள் பெற்றெடுத்த..
பழந்தமிழ் மண்ணையாண்ட
தமிழ் மனனன் பெயர் கொண்ட
பரராஜசிங்கம்..

பிறப்பினில் நெடுந்தீவு..
பிள்ளை வளர்பினில் வன்னி மண் கிளிநொச்சி..
மண்ணில் மறைந்திட்ட இறுதிக் காலம்
வவுனியா..
இப்ப இருப்பது இறைவனின் அருகினில்.

பிறந்தவர் வளர்ந்திட கல்விச் சாலை.. கிளி வட்டக்கச்சி
மகா வித்தியாலயம்.
அரவனைத்திட..
நாளும் பொழுதும் கோள் துணைக் கொண்டு..
இடைநிலை படித்திட ஏகினாரே..
ஸரர்ன்லிக் கல்லூரி வட்டகச்சி
இராமநாதபுரம் மா .வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியில் ஒழுக்கத்தில் மகிழ்ந்திட..
கற்றுத் தேர்ந்தார் பரீட்சையில் சிறந்திட
இளமையில் அரச பணியிலே..
இணைந்திட்டார் .கிராம அலுவலகராய்.

பரம்பரை விவசாயத்தை மறந்திடா
மண்ணினை நிதம் கிண்டி பயிரிட்டார்
அன்னைமண் அவருக்கு வளமிகு..
வாய்ப்புக்கள் விளைச்சலைக் கொடுத்தது.

செய்தொழில் சிறந்திட சேவை செய்யும்
உய்யவே வழிகள் பல உரைத்திட்டார்..

சேவை நாடி வந்தோர்க்கு தேவை தீர்க்கும்
நோய் தீர்க்கும் மருந்தாக ஜீ எஸ் பரா வாழ்ந்தார்.

மாறி மாறி இடம் மாறும் அரச பணியில்..
உமையாளபுரம் தொடங்கிய அரச பணி..
கண்டாவளை..கல்மடு கரைச்சி வட்டக்கச்சி..
பகுதியெங்கும் வேலை செய்தார்..

இடமாற்றம் பெற்று வவுனியா வந்து..
ஆண்டியாப் புளியங்குளம்.பாவற்குளம்.
தூரதேசம் என பாராது சூடுவெந்தபுலவு
செட்டிக்குளம்..ஓடி ஓடி இறுதியில் வவுனியா தோணிக்கல்
பணியோடு நிறைவு செய்தார்..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்மலாதேவி கரம் பற்றி வாழ்ந்து..
பிரதீப்..எஷாந்தி..லதீப் மதுஷி என
நான்கு பிள்ளைகளை பெற்றெடுத்து
நலமாக பலமாக படிக்க வைத்து..

தன்னைப் போலவே மூத்தவரை
கிராம அலுவலகராக்கி..
மூத்த மகளை விவசாய உதவியாளராக்கி
வரைகலை நிபுணராய் வாய்த்த லதீப் மகனை அஸிஸ்ரியா
உரிமையாளராக்கி.
கடைசி மகளை படிக்க வைக்கும் வேளைதனில்..
தன் வாழ்வினை மண்ணிலே முடித்துக் கொண்டார்.

மகளின் திருமணத்தை கண் குளிரக் கண்டவர்
நிம்மதியாய் தானிருக்க
நிகரில்லாத மருமகனாய் கஜரூபன் வாய்த்திடவே
தன்மகளின் மணமகனாக ஆக்கிக் கொண்டார்

தாயின் கருப்பையில் கூடப் பிறந்த தர்மகுலசிங்கம்..
பற்குணசிங்கம், சற்குணசிங்கம், தனபாலசிங்கம் தம்பியோடு,
தங்கையாய் ஜெகதீஸ்வரி, இரட்ணேஸ்வரி, கூடிப் பிறந்தார்.

தாய் வீட்டுக்கு வந்து சேர்ந்த மருமக்கள்..
காந்திமதி.. தனலட்சுமி, சரோஜினி தேவி, தர்மலிங்கம்,
மங்களேஸ்வரன், கோமள கௌரி தன்னடக்கத்தோடு உறவை
காத்து வாழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியப்பா வந்தாலே பேரின்பம் என
கதிரவன் மிதுசா.தாரணி..
திவ்யா..நிரூபா தினம் சொல்லும் வார்த்தை இது.
கீர்த்திகா, டிவாரகா, திருவரன்.
பிரசாந் கஸ்தூரி துஸ்யந்தன்.
துஸயந்தினி ஆகியோரின் சிரிக்கும் சித்தப்பா
இனி எங்கே காண்போம்.

மாமா என்றால் இன்னோர் தந்தை
யாழ் உறவு முறையில் உயர்ந்த்து
சிந்துஜன்..தனுசிகா..மதுரா..
சுபிரா..மதுசன்..விரூபன்..சுபானி..
சுவாதி, சங்கீத், பிரகீத், சுபிர்ணா, லிஷானா, தனுஸ்கா, சஞ்சனா..
தியாத்திகா பெரும் படைகளின் மாமா பரா..

அன்பு மனைவின் பிறப்புக்களின்
பாசத்திற்குரிய மைத்துனராக..
ஸ்ரீதரன்+விக்னேஸ்வரி
பிரபாகரன்+புஷ்பகலா
ஜெயந்தி+கணேசலிங்கம்
கருணாகரன்+தவசெல்வி
சசிதரன்+சுதர்ஷினி ஆகியோருடன்.
தந்தைக்குரிய ஸதானத்தில்..தன்
கடமைகளை கச்சிதமாய் செய்தார்.
எல்லோரும் ஏங்கி அழ
எங்கே போனீர்கள்..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமனுக்கு இரக்கம் இல்லை போலும்
உறக்கத்தை தொலைத்து
உம்மைத் தேடும்.
உள்ளத்தின் வேதனை சொல்ல
வார்த்தை இல்லை..

ஓய்வு பெற்று ஓயும் முன்னே..
இறைவனடி ஏனப்பா ஓடினீர்கள்..
மாதம் ஒன்று கடந்திடும்
மனசை விட்டு போக மாட்டீர்கள்..

30.07.1960 இல் பிறந்து
30.01.2021 இல் மறைந்திட்ட..
அப்பா என்ற அதிசயம்..
அக்கினியில் தகனம் இந்து மயானம் நெளுக்குளம்.

வாழ்வாங்கு வாழ்தீர் வையகத்தில்
நோய் கொண்டு போனதோ நொடிப் பொழுதில்..
வாடி வதங்கினோம் பிள்ளைகள் நாம்..
அம்மாவோடு வணங்கிடுவோம்..
இனி உங்களை நாம்.
அஞ்சலித்து வணங்குகின்றோம்..
ஆத்மா சாந்தி பெறட்டும்..
ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி.

**ஆக்கம்**
**மாணிக்கம் ஜெகன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகள் புலம்பல்

அப்பா என்றழைத்துமே
அருகில் ஓடி வந்து
ஆறுதல் தந்தீர்கள்
ஆறவும் முடியவில்லை
தேடித் தேடி என் கண்கள் வலிக்கிறது
நினைத்திடும் போதினில் நெஞ்சம் வெடிக்கிறது
தாத்தாவைத் தேடிடும் உங்கள்
பேத்திக்கு என்ன சொல்வேன்
பாதி வழிதனிலே பரிதவித்து நிற்கின்றோம்..
மீதி வழி கடக்க அப்பா
மீண்டும் இங்கு வரவேண்டும்
ஆறமுடியவில்லை அப்பா
ஆற்றிட வந்திடுங்கள்

**மகள்**
**எஷாந்தி கஜருபன்**

# பெறமக்கள் புலம்பல்

சித்தப்பாவிற்கு சில வரிகள்
தந்தைக்குத் தந்தையாக
தரணியில் எமை அனைத்தீர்
தகமைகள் நாம் பெற
தகவல்கள் பல தந்தீர்
தந்தை போல எண்ணி எமை
தாலாட்டிக் கதை சொன்னீர்
தந்தையிலாக்குறையதனை
தருணமதில் நிறைவு செய்தீர்
தங்களின் அன்பிற்காய்
தமை அங்கிள் என்று அழைத்திட்டோம்
தவிக்கவிட்டு எங்கு சென்றீர்
தகவலின்றி ஏங்குகிறோம்.



**கீர்த்திகா, டிவாரகா**
**திருவரன்**



www.pararajasingam.com
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமக்கள் புலம்பல்

என் எங்கள் அம்மாவும் நீங்களும் இணைபிரியாத சகோதரர்களாக அருகருகே இருந்தீர்கள் என் அம்மா என்னை, எங்களை விட்டு பிரிந்ததிலிருந்து அன்னையாய், தந்தையாய், அறிவு ஆசானாய் எனக்கு அளித்த அறிவுரைகளுக்கும், ஆழ்ந்த பாசத்திற்கும் இவ்வுலகியல் ஈடு இணை ஏதுமில்லை. உங்களின் புன்னகைத்த முகமும் கபடமற்ற செயலும் உங்களின் பிள்ளைகளில் ஒருவராய் நான்வளர்ந்த நாட்களை ஒரு நாளும் மறவேன் நான் எந்தவொரு முடிவை எடுப்பதென்றாலும் Uncle என்ற பெயரை உச்சரிக்க மறந்ததில்லை உங்களின் பதிலை கேட்டு செய்த காரியம் எதிலும் நான் இதுவரை தோற்றதில்லை எனக்கொரு வாழ்க்கை அமைத்து தந்த என்னை வழியனுப்ப வந்த போதல்லவோ உங்களின் புன்னகைத்த முகத்தை இறுதியாக பார்பேன். என்று எப்போதும் நான் நினைத் திருக்கவில்லை உங்களுக்கு உடல் நலக்குறைவு என்று அறிந்தபோது மனமுடைந்து போனேன். அன்றிலிருந்து ஒரு முறையேனும் உங்களை நேரில் வந்து பார்க்க வேண்டும் என்று நினைத்தேன் ஆனால் உலகத்தின் கொடிய நோயன கொரோனாவால் என் நினைவிற்கு உயிர் கொடுக்க முடியவில்லை இருப்பினும் உங்களிடம் தொலை பேசியில் உரையாடியதால் என் மனம் சற்று ஆறுதலடைந்தேன். நீங்கள் குணமடைந்து வீடுவீர்கள் என உறுதியாக எண்ணினேன். அந்த எண்ணம் இவ்வளவும் விரைவாக உண்மையற்றதாகிவிடும் என்பதை ஒரு கணம் கூட நினைத்துப் பார்க்கவில்லை நீங்கள் என்பதை இப்போது கூட என்மனது ஏற்றுக்கொள்ள மறுக்கிறது உங்களின் ஆத்மா சாந்தியடைய என்றென்றும் பிரார்த்திக்கிறோம்.

**உங்கள் மருமகள் தனுஷிகா**
**மருமகன் சிந்துஷன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தையின் கல்லறையிலிருந்து...

நேற்றைக்கும் இன்றைக்கும்
எவ்வளவு வித்தியாசம் ஒரு பிரிவில்
ஒரு இழப்பில் ஒரு மரணத்தில்
நேற்றிலிருந்து இன்று

தலைகீழாய் மாறிப் போகிறது நேற்று என் காதுகளை
நிறைத்திருந்த அவர் குரலை இனிநான் கேட்கப் போவது
இல்லை நேற்று நான் தொட்டுப் பார்த்த
அவர் கரங்களை இனிநான்
தொடப் போவதும் இல்லை
அந்தக் கரங்கள் பாதுகாப்பின் கரங்கள்

அந்தக் குரல் அன்பும் கரிசனையும்
நிறைந்த குரல் ஓ தந்தையே
நீங்களும் நானும் முகமுகமாய்ச் சந்திக்கப் போவதில்லை
இரவு பகல் பாராமல் நாம் பேசித் தீர்த்த

பொழுதுகள் அத்தனையும் நாம் பகிர்ந்து கொண்ட
வார்த்தைகள் அத்தனையும்
மெல்ல மெல்ல மேலெழுந்து வருகிறது
நம் அறிவுக்கு எட்டிய அனைத்தும்

நமது உரையாடலின் அங்கமாக இருந்திருக்கிறது
ஒரு தந்தை மகன் உறவு அல்ல நம்முடையது
ஒரு தோழமை உறவுக்குளந்த விதத்திலும்
குறைந்தது அல்ல நம்முடைய உறவு
போய் வாருங்கள் தந்தையே கனத்த இதயத்தோடு
விடைகொடுக்கிறேன்

**பா.கதீஷன்**
**ஊடகவியலாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயம் கற்கவென
வீட்டைப் பிரிந்து வந்தேன்
பெறா மகனாகப் பேணி
எனைக் காத்தீர்கள்
தேடி வந்து உணவளித்து
தேவைகளை நிறைவேற்றி
பாசமுடன் பார்த்தீர்கள்
எப்படி நான் மறப்பேன்
காணக்கிடைக்கவில்லை
கவலையும் தீரவில்லை
காலத்தின் கட்டாயம்
காலன் கவர்ந்திட்டான்
ஆனாலும் சாலச்சிறந்த
உங்கள் வாழ்வு
எங்கள் நினைவுகளோடு...

**உங்கள் ஆத்மா சாந்திக்காக இறைஞ்சி நிற்கும்**

**க.சரண்யா**
**புதுக்காடு, இராமநாதபுரம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வன் அண்ணா!

அமைதியே! உருவான அப்பா! அன்பின் உச்சமானஅம்மா! தேவை எது தேடியும் எங்கும் போகத் தேவையில்லாத அரவணைப்பு, விளையாட்டு, விட்டுக்கொடுப்பு, பாதுகாப்பு என அத்தனையும் நிறைவான சகோதரர்கள்! ஆண்டவன் இருந்தால் அவன் கூட சந்தோசம் தேடி நம் வீடுதான் வருவான் எனுமளவுக்கு வாழ்ந்த கொடுப்பனவை வரம் வாங்கி வாழ்ந்தவர்கள் நாம்.

வட்டக்கச்சியில் பிறந்து வாய்க்கால், வனம், குளம், வயல்கள், பள்ளிகள் எனச் சேர்ந்து குதித்த கால நினைவுகள் கண்ணைவிட்டு மறையுமுன்னே என் அன்புக்கே உரித்தான அண்ணன் என்னைவிட்டு மறைவான் என்பதை நான் கனவிலும் எண்ணியதே கிடையாது அண்ணா! உன்னை நாம் இழந்த காரணமோ உன் வயதோ ஒன்றும் பெரியதல்ல இன்னும் பல காலம் எம்மோடு வாழ்ந்திருக்க வேண்டியவன் நீ

அதைவிட குறிப்பாக திருமணம், வெளிநாடு என்று எல்லோரும் கூட்டைவிட்டுப் பறந்தாலும் நானும் பறக்கும் வரை நான்காவது அண்ணா நீ என்னுடன் ஒருகூட்டுக் கிளியாக அம்மா அப்பாவுடன் உன் பாதுகாப்பில் பறந்த அக்கால நினைவின் சிறகுகள் இன்று ஒடிந்து நிற்கிறேன்.

குடும்பத்தை அழகுற நேசித்தவன் அயலவர்கள், சுற்றும், உன் பணி நண்பர்கள் எல்லோருமே உன்னை மதிக்கும் பெருமையே எமக்குப் பெரும் கொடையாயிருந்தது. உன் பிரிவை அண்ணி, உன் பிள்ளைகள், நம் சகோதரர்கள், என் பிள்ளைகளுடனும் பங்கிடவே முடியாத துயரமண்ணா.

**உங்கள் ஆத்ம சாந்திக்காக வேண்டிநிற்கும்...**

**அன்புக்குரிய தங்கை**

**ரதி மங்களேஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## திருவாசக சிறப்பு

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறிஅளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம்என்னும் தேன்.

## சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சி னீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமனிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்த னடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க
ஈச னடிபோற்றி எந்தையடி போற்றி



www.pararajasingam.com
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறையினும் தேவ னடிபோற்றி
ஆராத இன்பம் அருளு மலைபோற்றி
சிவனவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுது மோய உரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்தும் மண்ணிறைந்தும் மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யாய் யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானம் மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பொருமான் வல்வினையேன்தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கும் மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலன்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே



www.pararajasingam.com
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும்வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுட ரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனே ஓ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லி மாலை



படிக நிறமும் பவளச் செவ்வாயும்
கடிகமழ் பூந் தாமரைபோற் கையும் - துடியிடையும்
அல்லும் பகலும் அனவரதமும் துதித்தால்
கல்லுஞ் சொல்லாதோ கவி

வெண்டா மரைக்கன்றி நின்பதம்
தாங்க என்வெள்ளை யுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொலோ
சகம் ஏழும்மளித்(து)
உண்டான் உறங்க ஒழித்தான் பித்தாக
உண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே!
சகல கலாவல்லியே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற்கொடியே
கனதனக் குன்று மைம்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு(து)
தார்த்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ
வுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே.

தூக்கும் பனுவற் துறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய் வடநூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர் செந்நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.



www.pararajasingam.com
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சப்(பு) பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே!
நெடுந் தாட்கமலத் (து)
தஞ்சத் துவசம் உயர்த்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் (து) திருந்தாய்
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமும் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழு(து) எளி(து) எய்தநல்
காய், எழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங் காலும் அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்!
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனும் என்பால்
கூட்டும் படிநின் கடைக்கண்நல்
காய், உளங் கொண்டுதொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே!
சகல கலாவல்லியே.



www.pararajasingam.com
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்விற் பனமும் அவதான
மும்கவி சொல்லவல்ல
நல்வித்தையும் தந் தடிமைகொள்
வாய், நளி னாசனஞ்சேர்
செல்விக்(கு) அரிதென்(று) ஒருகால
முஞ் சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே!
சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்டும் உயிராம்மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார் நிலந்தோய் புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோ(டு)
அரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே!
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும் என்
பண்கண் டளவிற் பணியச் செய்
வாய் படைப் போன் முதலாம்
விண்கண்டதெய்வம் பல் கோடியுண்
டேனும் விளம்பில் உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ?
சகல கலாவல்லியே.


www.pararajasingam.com
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நோய்களும் அதற்கான தீர்வுகளும்

- **கண்கட்டிக்கு**
  செஞ்சந்தனத்தை முலைப்பாலில் உரைத்துப் பூசவும்

- **கள்ளி, எருக்கலைப்பால் கண்ணில் பட்டால்**
  உடன் உடைத்த தேங்காயைத் துருவி சிறிது பால் பிழிந்துவிடவும்.

- **கட்டிக்கள் கரைய**
  குண்டுமணி, ஊமத்தை, குப்பைமேனி இவைகளின் வேரும் துளிரும் கஞ்சியில் அரைத்து பூசவும்.

- **கருந்தேமலுக்கு**
  மருதோன்றி இலையுடன் நவச்சாரம்,வெண்காரம் கட்டி அரைத்து பூசவும்

- **காதுகுத்துக்கு**
  தயிர்வேளை இலையைப் பிழிந்து நான்கு அல்லது ஐந்து துளி காதில் விடவும்.

- **காதினுள்புண்ணிற்க்கு**
  மிளகாய் நுனியைப் பிய்த்து அதனுள் சிறிதுவேப்பெண்ணெய் விட்டு நெருப்பில் சூடு காட்டி விடவேண்டும்.

- **காதிரைச்சலுக்கு**
  தயிர்வேளை இலைச்சாறும் நல்லெண்ணையும் சமன்கட்டி காய்ச்சிய எண்ணெயை காதில் இரண்டு அல்லது மூன்று துளிவிட்டு தலையிலும் பூசவும்.



www.pararajasingam.com
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **சளியுடன் கூடிய இருமல்**

சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தான்காய், நெல்லிக்காய், நற்சீரகம், வேப்பிலை, சம எடை அரைத்து காலை, மாலை, தேனில் கலந்து அருந்தவும்

❖ **தடிமனுக்கும் தொண்டை நோவுக்கும்**

உலர்ந்த மஞ்சளை வேப்பெண்ணெய்யில் தேய்த்து அரைத்து நோ உள்ள இடத்தில் பூச மாறும்.

❖ **முகப் பருவிற்கு**

கையாந்தரைச்சாறு 1/3 போத்தல் மஞ்சள் தூள் ஒரு தேக்கரண்டி நல்லெண்ணை காய்ச்சி முகத்தில் பூசி பச்சைத் தண்ணீரில் முகம் கழுவவும்.

❖ **நட்டுவக்காலிக் கடிக்கு**

வசம்பு, உள்ளி சமன் கூட்டி நல்லெண்ணையில் எரித்து உருக்கி பசும்பால் விட்டு கலக்கிச் சாப்பிடவும்.

❖ **குரங்கு, பூனை, பன்றி, நரி, புலி, இவை கடித்தவிடத்திற்கு**

அவுரியயின் வேரை அரைத்து (வெந்நீரில்) நான்கு நாட்கள் கொடுக்க குணமடையும்.

❖ **வயிற்றுகுத்துக்கு**

இளநீர் 1/3 ஆக வற்ற வைத்து ஓமமும் நெற் பொரியும் தூய் செய்து போட்டுக் குடிக்க தீராத வயிற்றுக்குத்து நீங்கும்



www.pararajasingam.com
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **தொண்டை நோவிற்கு**

  நவச்சாரத்தை முட்டை வெண்கருவில் அரைத்து நோ உள்ள இடத்தில் பூசமாறும்.

- **பல்வலிக்கு**

  அரிவச்செடி மூலத்தை கசாயித்து வாய்கொப்பழிக்க பல்வலி தீரும்.

- **பல் நோய்க்கு**

  சுக்கு கடுக்காய், நாயுருவி, வேர்ப்பட்டை இவை சம அளவில் வறுத்து பொடித்தூள் ஆக்கி பல்லில் தேய்க்க பல் நார், பல் அசைவு நீங்கி பல் உறுதி பெறும்.

- **இருமலினால் உண்நாக்கு**

  நவச்சரத்தை பொடியாக்கி நான்கு அல்லது ஐந்து முறை உண்ணாக்கில் தடவ சுகம் உண்டாகும்.

- **பேன்சாக**

  படிகாரத்தை தூள் செய்து நீரில் கலந்து தலையில் பூசி மூன்று மணிநேரத்தின் பின் ஸ்நானம் செய்யவும் கருஞ்சீரகத்தை தேசிப்புளியில் அரைத்து தலைக்குத் தடவி முழுகவும்.

- **முள்ளு வெளியேற**

  எள்ளு சப்பியை முள்ளுதைத்த இடத்தில் வைத்துக்கட்ட முள்ளு வெளியாகும்.

- **குதிக்கால் வேதனைக்கு**

  கற்பூரம் ஐம்பது கிராம், நல்லெண்ணெய் கால் போத்தல், சாராயம் சிரிதளவு சேர்த்து அரைத்துப் பூசவும்



www.pararajasingam.com
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்றோரின் அமுதவாக்கு

1. நட்பு என்பது கண்ணுக்குப் புலப்படாத ஓர் அன்பு ஊற்று. அது எங்கே தோன்றுகிறது. எப்போது உண்டாகிறது என்று யாராலும் சொல்ல முடியாது.

**- காந்தியடிகள் -**

2. உண்மை நாகரீகம் என்பது மனிதனது தூய்மையான ஒளியே ஆகும். எளிய தன்மையும், குற்றமற்ற வாழ்வும் எல்லா உயிர்களையும் தன்னைப் போல் நேசிக்கும் மனப்பான்மையும் கொண்டுள்ள மனிதனே உண்மை நாகரீகத்தினைக் கொண்டவன் ஆவான்.

**- தாகூர் -**

3. அன்பு இயற்கை, பகைமை செயற்கை. படைப்பது அன்பு, அழிப்பது பகைமை. அன்பென்பது ஒற்றுமையாம். பகைமை என்பது குழப்பமேயாம் அன்பு ஜோதியாம். பகைமையே துன்பமாம். அன்பு கோர்க்கும், பகைமை பிரிக்கும். அன்பே கடவுள், பகைமை மாயம்.

**- சுவாமி இராமதாசர் -**

4. பிறருக்கும் நன்மை செய்யப் பிறந்த நீ அவர்களுக்கு நன்மை செய்யாவிடில், தீமையாவது செய்யாதிரு

**- விவேகானந்தர் -**

5. மறதி என்ற ஒன்று பெரிய அளவில் மக்களினத்திற்கு அமைந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். இன்று பல சிக்கல்கள் எழுந்திராமல் போயிருக்கும்.

**- டாக்டர் மு.வரதராஜ் -**



www.pararajasingam.com
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுர்வேத சுலப வைத்தியம்

## ஜன்னி குணமாக

ஜன்னி கண்டுவிட்டது என்று தெரிந்தவுடன், கொஞ்சம் முருங்கைப் பட்டையைக் கொண்டுவந்து, அம்மியில் வைத்து அதே அளவு இஞ்சி கடுகு, வெள்ளைப்பூண்டு இவைகளையும் சேர்த்து, நன்றாக நையத்தட்டி, அதை எடுத்து காலில், பெருவிரலில் கனமாக விரலைச் சுற்றி வைத்து துணியால் கட்டிவிட வேண்டும். இந்த விதமாக கட்டிவிட்டால், சுமார் அரைமணி நேரத்தில் ஜன்னி இறங்கி, நோயாளி பிழைத்துக்கொள்வார்.

## மூலநோய் குணமாக

வேப்பமரத்து வித்துக்களை உடைத்து, உள்ளே உள்ள பருப்பை மட்டும் எடுத்து சுத்தமாய் அம்மியில் வைத்து, பசும்பால் விட்டு மை போல அரைத்து இரண்டு மொச்சைக் கொட்டையளவு எடுத்து, வாயில் போட்டு விழுங்கிவிட வேண்டும். இந்த விதமாகத் தொடர்ந்து ஏழு நாட்கள் சாப்பிட்டு வந்தால், நீண்ட நாட்களாக இருக்கும் மூலம் கரைந்து மூல நோய் அடியோடு குணமாகும்.

இந்த மருந்தை சாப்பிடும்போது, அதிக காரம் சேர்க்கக்கூடாது, காரம் தேவையானால் மிளகு சேர்த்துக் கொள்ளலாம்.

மோர், தயிர், பால் அதிக அளவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். பாகற்காய் சேர்க்கக்கூடாது, ஏழுநாளில் குணம் தெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாய்வேக்காடு குணமாக

ஒரு சிலருக்கு வாய்வேக்காடு ஏற்பட்டு ஆகாரம் சாப்பிடமுடியாத நிலைக்கு வந்துவிடும். எதை வாயில் போட்டாலும் எரியும். நாவில் படும் பொருள், மணல் போல் ருசியற்று உறுத்தும். சிலருக்கு நாவில் வெடிப்பு தோன்றும். உதடு வெடிக்கும் கடவாய் கூட வெந்துவிடும்.

வாயில் புண் ஏற்பட்டால், வயிற்றில் புண் இருக்கும். இந்த சமயம் மணித்தக்காளி (மணத்தக்காளி) எனும் கீரையைக் கொண்டுவந்து, துவரம் பருப்புச் சேர்த்து, சமைத்துச் சாப்பிடவேண்டும். கீரையுடன் தேங்காயை அரைத்தும் சேர்க்கலாம். காலை மாலை மூன்று விரற்கடையளவு தேங்காயை கொஞ்சம் கொஞ்சமாக வாயில் போட்டு மென்று, அந்தப் பாலை சிறிது நேரம் வாயில் வைத்திருந்து, விழுங்க வேண்டும். இந்த விதமாக தொடர்ந்து மூன்று நாட்கள் சாப்பிட்டால், வயிற்றுப்புண், வாய்ப்புண் ஆறிவிடும். நாவில் நல்ல ருசி தோன்றும். ஆகாரத்தை ருசித்து சாப்பிட முடியும்.

## ஜீரண சக்தி உண்டாக.

ஒரு சிலருக்கு உண்ட ஆகாரம் சரிவர ஜீரணம் ஆகாது. சில சமயம் வயிற்று வலி உண்டாகும். சரியான பசி தோன்றாது. பசி ஏற்படாது. சாப்பிடவேண்டிய நேரத்தில் கடனுக்குச் சாப்பிட வேண்டியிருக்கும். பசித்துப் புசி என்பது ஆன்றோர் வாக்கு. பசியில்லாமல் கடனுக்குச் சாப்பிட்டால், அதன் காரணமாக, நாளாவட்டத்தில் வயிற்றில் கோளாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படும். ஆகையால் உண்ட ஆகாரம் நன்றாக ஜீரணமாக மருந்து சாப்பிடவேண்டும். நன்றாகப் பசி எடுத்த பின்னரே சாப்பிடவேண்டும்.

தேக்கரண்டியளவு சீரகத்தை அம்மியில் வைத்து, கால் தேக்கரண்டியளவு உப்புச் சேர்த்து, மைபோல அரைத்து, ஒருபிடி சுடு சாதத்தில் போட்டு சாப்பிட்டு, கால்மணி நேரம் இருக்கும் பொழுது, இந்த சீரகச் சாதத்தைச் சாப்பிட்டு, சிறிதளவு வெந்நீர் குடித்துவிட வேண்டும்.

## சீதபேதி குணமாக

சீதபேதி ஒரு தொற்றுநோய். ஆனால் அதிகளவில் அதி வேகமாகப் பரவக்கூடியதல்ல. சீதபேதியில் பாதிக்கப் பட்டவர்களின் மலத்தில் வெளியேறும் ஒரு சில கிருமிகள் நமது உணவில் கலந்து, வயிற்றினுள் சென்ற சில நாட்களுக்குப் பின் தான் சீதபேதி உண்டாகும். ஈயின் மூலம் தான் இந்த நோய் பரவுகிறது வைத்திய ஆராய்ச்சி நிபுணர்கள் கூறுகிறார்கள். சீதபேதியினால் பாதிக்கப் பட்டவர்களின் சீதம், இரத்தம், மலம் இவற்றில் கலந்து வரும் சீதபேதியை உண்டுபண்ணும் கிருமிகள் ஒருசில மணி நேரம்தான் உயிர்வாழும், பிறகு இறந்துவிடும்.

இந்த ஒருசில மணி நேரத்திற்குள், அது மனித உடலில் புகுந்து குடல் பகுதிக்குச் சென்றுவிட்டால் தான், அது பிழைக்கும். இனவிருத்தி செய்யும். குடலில் புண் தோன்றும். அதன் காரணமாகத்தான் சீதபேதி உண்டாகும். மற்ற



www.pararajasingam.com
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷக்கிருமிகள் போல் இது நோயைப் பரப்பும் சக்தியற்றதாக இருப்பதால் தான், இது அதிக அளவில் பரவுவதில்லை என்று கூறுகின்றனர். இருந்தாலும் சீதபேதி ஏற்பட்டவுடன், அதைக் குணப்படுத்த வழி தேடவேண்டும். ஆரம்பத்திலேயே தக்கசிகிச்சை அளித்தால் குணமாகிவிடும்.

பார்க்கலாம் என நாளைக் கடத்தினால், குடலில் புண் விருத்தியாகிக்கொண்டே வரும். வரவர அதிக அளவில் இரத்தம் வெளியேற ஆரம்பிக்கும். உடல் பலம் குறையும் சோர்வு ஏற்படும். உடல் வெளுக்கும். கடைசிக் கட்டத்தில் நோய் எந்த சிகிச்சைக்கும் கட்டுப்படாது. சீத பேதி முற்றி, காய்ச்சல் ஏற்பட்டால் அது அபாய கட்டமாக இருக்கும்.

கீழ்க்கண்ட ஒரு சில மருந்துகள் கைகண்ட பலன் அளிக்கக்கூடியதாக இருந்தாலும். ஒரு சிலருக்கு முன்னேற நாளில் குணம் கொடுக்கும். ஒரு சிலருக்கு 4-5 நாட்கள் சாப்பிட்டால் தான் குணம் கொடுக்கும்.

ஆலமரத்தின் விழுதின் நுகளை வெட்டிக்கொண்டு வந்து, ஒரு கைப்பிடியளவு எடுத்து, தண்ணீரில் கழுவி, அம்மியில் வைத்து, மை போல் அரைத்து, அரை டம்ளர் அளவு எருமைத் தயிரில் கலந்து, காலை வேளையில் மட்டும் கொடுக்க வேண்டும். மூன்றே நாளில் சீதபேதி குணமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

1960 · 07 · 30



2021 · 01 · 30

நெடுந்தீவை பிறப்பிடமாகவும்
கூமாங்குளம் தனிநாயகம் வீதியை வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

## கதிரவேலு பரராஜசிங்கம்

இறைவனின் திருவிளையாடல்களில்
சில சம்பவங்கள் உணர்த்தி விட்டுச்செல்கிறது
இந்த நிமிடம் தான் உனக்கு சொந்தம்மென்று
நேற்றைய தினம் நேரில் பாத்த முகம் இன்று
பெட்டியில் நீங்கள் விடை பெற்ற செய்தி கேட்டு
எங்கள் வார்த்தைகள் வற்றிப்போய் விட்டதே
உன்போல் யாரையும் நாம் கண்டதில்லை
இனிமேல் யாரும் எமக்கில்லை
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

assistia
beyond the best



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கண்ணீர் அஞ்சலி

நெடுந்தீவை பிறப்பிடமாகவும்
கூமாங்குளம் தனிநாயகம் வீதியை வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

# கதிரவேலு பரராஜசிங்கம்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1960 . 07 . 30 | 2021 . 01 . 30 |



ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக் கொள்கின்றோம்...

யற்குணசிங்கம் குடும்பத்தினர்
மற்றும் சகோதரர்கள்

www.pararajasingam.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலிகள்

நெடுந்தீவை பிறப்பிடமாகவும் கூமாங்குளம் தனிநாயகம் வீதியை வதிவிடமாகவும் கொண்ட



அமரர்

## கதிரவேலு பரராஜசிங்கம்


**மலர்வு**
**1960.07.30**

**உதிர்வு**
**2021.01.30**

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனின் திருவடிகளை
பிரார்த்தனை செய்கிறோம்.

**குடும்பத்தினர்**

www.pararajasingam.com
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




www.pararajasingam.com
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

*காலத்தினாற் செய்த உதவி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப்பெரிது.
பயன் தூக்கர் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது.*

*எமது குடும்பத்தின் தலைவராய் வாழ்ந்து தெய்வத்தின் திருவடிக்கே சென்றுவிட்டவரின் செய்திகேட்டு நேரில் வந்து கலந்து கொண்டு ஆறுதல் கூறி துன்பத்தை எம்முடன் பகிர்ந்து கொண்டவர்களுக்கும், உடனிருந்து சடங்குகளிலும் கிரியைகள் செய்வதிலும் எல்லா விதத்திலும் தாமாகவே முன்வந்து அளப்பரிய உதவிகளைச் செய்த எல்லோருக்கும் வெளிநாடுகளிலிருந்தும், உள்நாடுகளிலிருந்தும், தொலைபேசி மூலமும் அனுதாப செய்திகளை தெரிவித்தவர்களுக்கும் பிரசுரங்கள், பதாதைகள் மூலம் துக்கத்தை பகிர்ந்துகொண்டவர்களுக்கும் அந்தியேட்டிக் கிரியை, வீட்டுக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது குடும்பத்தினர் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

இங்ஙனம்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருக்கிறாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்.

'இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமாகும்'

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org